**செய்தி வெளியீடு எண்:193** **நாள்: 01.03.2019**

## செய்தி வெளியீடு

### தமிழகம் முழுவதும் உள்ளசாலையோர கடைகள் மற்றும் மின்சாதனப் பொருட்கள் விற்பனையகங்களில் எடையளவு மற்றும் பொட்டலப் பொருள் விதிகளின் கீழ் – தொழிலாளர் துறை திடீராய்வு

நுகர்வோர் நலன் பாதுகாக்கும் வகையில் தொழிலாளர் துறையின் மூலம் அமலாக்கம் செய்யப்படும் சட்டமுறை எடையளவு சட்டம் 2009 மற்றும் 2011 ம் வருட சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் சட்டமுறை எடையளவு அமலாக்க அதிகாரிகளால் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையில் பிப்ரவரி 2019ம் மாதத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைப்படி 2011 ம் வருட சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் தமிழகத்தில் உள்ள எலக்ட்ரிகல்ஸ் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் கடைகளில் அமுலாக்க அதிகாரிகளால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறாக 609 கடைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் 96 முரண்பாடுகள் கண்டறியப்பட்டும், சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர்களுக்கு இசைவு தீர்வு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2009 – ம் வருட சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சாலையோர பழம், பூ மற்றும் காய்கறி கடைகள் போன்றவற்றில் 851 கடைகள் ஆய்வு செய்யப்பட்டதில் 140 முரண்பாடுகள் காணப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர்களுக்கு இசைவு தீர்வு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஆய்வின் போது மறுமுத்திரையிடப்படாத மற்றும் தரமற்ற எடையளவுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுபோன்ற சிறப்பு ஆய்வுகள் இனி வரும் மாதங்களிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முரண்பாடுகள் கண்டறியப்படின் அந்நிறுவனங்கள் மீது சட்ட விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் விற்கப்படும் பொட்டலப் பொருட்கள் மீது சட்டரீதியான அறிவிப்புகள் இல்லாதது, பொருளில் குறிப்பிட்ட அதிகபட்ச சில்லறை விலையைவிட அதிக விலைக்கு விற்பது நியாய விலைக் கடைகளில் அளவு குறைவாக விநியோகம் செய்வது, பெட்ரோல் / டீசல் பம்புகளில் அளவு குறைவாக விற்பனை செய்வது போன்ற எடையளவு குறைபாடுகள் குறித்த புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS (Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைப்பேசி செயலியை Google Play Store மூலம் பதிவிறக்கம் செய்து அதன் வாயிலாக நுகர்வோர்கள் / பொதுமக்கள் புகார் அளித்து உரிய நிவாரணம் காணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**